2021 செப்டம்பர் மாதம் 30 – ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 1132 / 2015*

*2021 –ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 – ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 5 வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. V. சசிகலா, அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| *பெயர்* | : | R W 5, நவீன் |
| தகப்பனார் பெயர் | : | செல்லைய்யா |
| ஊர் | : | டி.நகர், சென்னை |
| வட்டம் | : | சென்னை |
| மாவட்டம் | : | சென்னை |
| தொழில் | : | முதுநிலை சட்ட அதிகாரி |
| வயது | : | 31 |

தேதி: 30.09.2021.

**முதல் விசாரணை :–**

நான் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட முதுநிலை சட்ட அதிகாரியாக பணிபுரிகின்றேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கின்றேன். 1–வது எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்பதற்கான சான்று எ.சா.ஆ.5 ஆகும். 1–வது எதிர்மனுதாரர் வாகனத்தின் வரலாறு எ.சா.ஆ. 6 ஆகும். என்னுடைய சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுவை தள்ளுபடி செய்யவேண்டுகின்றேன்.

குறுக்கு விசாரணை:– (மனுதாரர் தரப்பில்)

நான் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ.5 ஆவணம் எங்களது கிளை அலுவலகத்தை பொறுத்து கூறுகின்றோமா என்றால் எங்கள் நிறுவனத்தை பொறுத்து அந்த சான்று வழங்கப்பட்டுள்ளது. வாகன உரிமையாளரிடம் காப்பீட்டு நகலை தாக்கல் செய்யும்படி நாங்கள் கேட்கவில்லை என்றால் எங்கள் நிறுவனத்தில் அந்த வாகனம் காப்பீடு செய்யவில்லை அதனால் கேட்கவில்லை.

எ.சா.ஆ. 6 ஆவணத்தில் 20.03.2015 முதல் 19.03.2016 வரை அந்த வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது போல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை. 1–வது எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் தான் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இழப்பீடு கொடுக்கும் கடமையை தவிர்ப்பதற்காக எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யவில்லை என்று தற்போது தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கு வாகனத்தின் காப்பீட்டு விபரங்கள் குறித்து காப்பீட்டு நிறுவனம் தான் தகவல் அளிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை:– (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

ம.சா.ஆ.19 ஆவணத்தில் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரி. அதில் குறிப்பிடப்பட்டுள்ள கவர் நோட் எண் எங்கள் நிறுவனத்திற்கு தொடர்பில்லாதது. காப்பீடு செய்வதற்கு பெறும் கட்டணத்திற்குண்டான பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை. அதை தாக்கல் செய்தால் தான் 1–வது எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்ற உண்மை நிலவரம் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை:–</u> இல்லை.

ஒப்பம்/– எம். மூர்த்தி,
தலைமைக்குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.